# டி.என்.பி.எஸ்.சி. நடத்தும் வி.ஏ.

www.tnpsctricks.com

அரசு வேலை பலருடைய லட்சிய கனவாக இருக்கிறது. சரியான திட்டமிடலுடன் கடுமையாக உழைத்தால் அரசு வேலை கனவை உங்களால் நனவாக்க முடியும். அதற்கான வாய்ப்பு கைகூடி வர தினத்தந்தி வழிகாட்டுகிறது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) கிராம நிர்வாக அலுவலர் (VAO) பதவிகளுக்கான தேர்வு அறிவிப்பினை 12.11.2015 அன்று வெளியிட்டுள்ளது. மொத்த காலி பணியிடங்கள் : 813. இத்தேர்விற்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 14.12.2015. எழுத்து தேர்வு நடைபெறும் நாள் : 14.2.2016.

அரசு வேலை பெற முயற்சி செய்யும் வாசகர்களுக்கு வழிகாட்டும் வகையில் மாதிரி வினா–விடைகளை தினத்தந்தி ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் கிராம நிர்வாக அலுவலர் தேர்விற்கான மாதிரி வினா–விடைகளை தினத்தந்தியும், சென்னை அப்பல்லோ பயிற்சி மையமும் இணைந்து இன்று முதல் தினமும் வெளியிடுகிறது. அப்பல்லோ பயிற்சி மையத்தின் இயக்குனர் ஆர். சாம் ராஜேஷ்வரன் தலைமையிலான அனுபவம் மிக்க குழுவினர் இந்த மாதிரி வினா–விடைகளை தயாரித்து அளிக்கிறார்கள்.

கிராம நிர்வாக அலுவலர் தேர்வுக்கு தயாராவது எப்படி?, என்ன பாடத்திட்டம்?, கேள்வித்தாள் எப்படி அமையும்? எந்த பாடப்பகுதிகளை படிக்க வேண்டும்? அதில் இருந்து கேள்விகள் எப்படி கேட்கப்படலாம்? தேர்வில் கேள்விகள் எப்படி அமைந்திருக்கும்? என்பது உள்பட உங்களது பல்வேறு சந்தேகங்களை தெளிவுபடுத்தும் நோக்கில், இந்த மாதிரி வினா விடை பகுதி அமைந்திருக்கும்.

முதலில் நாம் எந்த தேர்விற்கு தயார் ஆனாலும் அத்தேர்விற்கான பாடத்திட்டத்தையும், தேர்வுமுறையையும் அறிந்திருக்க வேண்டும்.

**பாடத்திட்டம்**

கிராம நிர்வாக அலுவலர் தேர்விற்கான பாடத்திட்டம் பற்றிய விவரம் பின்வருமாறு:–

| பாடம் | வினாக்கள் | தரம் | மொத்த மதிப்பெண் | கால அளவு |
|---|---|---|---|---|
| பொது அறிவு | 75 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | 300 | 3 மணி |
| திறனறி தேர்வு | 20 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | | |
| கிராம நிர்வாகம் | 25 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | | |
| பொது தமிழ் / பொது ஆங்கிலம் | 80 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | | |

www.tnpsctricks.com

**I. எழுத்துத்தேர்வு (கொள்குறி வகை) = 300 மதிப்பெண்கள்**

இத்தேர்வில் பொதுஅறிவுப் பகுதியில் 75 வினாக்களும், திறனறி தேர்வில் 20 வினாக்களும், கிராம நிர்வாகம் தொடர்பாக 25 வினாக்களும், பொது தமிழ் அல்லது பொது ஆங்கிலத்தில் 80 கேள்விகளும் ஆக மொத்தம் 200 வினாக்கள் கேட்கப்படும். ஒரு கேள்விக்கு 1½ மதிப்பெண்கள் வீதம் (200 x 1½) 300 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் பொது அறிவுக் கேள்விகள் பத்தாம் வகுப்பு தரத்திலும் அட்டவணையில் காணப்படும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கேட்கப்படும். பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பத்தாம் வகுப்பு தரத்தில் கேட்கப்படும்.

**கிராம நிர்வாக அலுவலர் தேர்வுக்குள்ள சிறப்புகள்:–**

- மிக எளிமையான வழியில் அரசு துறையில் நுழைவதற்கு இத்தேர்வு வழி வகுக்கிறது.
- பத்தாம் வகுப்பு தேர்ச்சி மட்டுமே இத்தேர்வு எழுதுவதற்கான தகுதியாக இருப்பதால் அனைத்து தரப்பு மாணவர்களும் இதில் பங்கேற்க முடியும்.
- குறைந்தபட்ச பொது அறிவு திறனும், பத்தாம் வகுப்பு கல்வி தரத்தில் கேள்விகளும் இடம்பெறுவதால் பட்டப்படிப்பு மாணவர்களும், முதுகலை மாணவர்களும் இதில் எளிதாக வெற்றி பெற முடியும்.
- குறிப்பாக இத்தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் பெரும்பாலும் (70 சதவீதம்) 10–ம் வகுப்பு கல்வி தரத்தில் இடம் பெறுவதால் பள்ளி பாட புத்தகங்கள் பெரிதும் உதவும்.



**தேர்விற்கான பாடத்திட்டம் பின்வருமாறு:–**

**பொது அறிவு**

**அலகு – I பொது அறிவியல்** (General Science)

i. இயற்பியல் (Physics)
ii. வேதியியல் (Chemistry)
iii. தாவரவியல் (Botany)
iv. விலங்கியல் (Zoology)

**அலகு II – பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்ச்சிகள்:** (General Knowledge and Current Affairs)

**அலகு III புவியியல்** (Geography)

i. புவியியல் கோட்பாடுகள் (Geographical Theory)
ii. இந்திய புவியியல் (Indian Geography)
iii. தமிழ்நாட்டு புவியியல் (Geography of Tamil Nadu)

**அலகு – IV – இந்திய வரலாறு மற்றும் பண்பாடு**

i. பழங்கால வரலாறு (Ancient India)
ii. இடைக்கால வரலாறு (Medieval India)
iii. தற்கால வரலாறு (Modern India)
iv. இந்திய பண்பாடு (Indian Culture)

**அலகு V - இந்திய அரசியலமைப்பு** (Indian Polity)

**அலகு VI – பொருளாதாரம்** (Economy)

i. இந்தியப் பொருளாதாரம் (Indian Economy)
ii. தமிழ்நாட்டுப் பொருளாதாரம் (Tamil Nadu Economy)

**அலகு – VII இந்திய தேசிய இயக்கம்** (Indian National Movement)

# ஓ. தேர்வுக்கு தயாராவது எப்படி?

i. 1857 – பெருங்கிளர்ச்சி (1857 Revolt)
ii. இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress)
iii. தேசிய தலைவர்கள் எழுச்சி (Emergence of National Leaders)
iv. சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு (Role of Tamil Nadu in Freedom Struggle)

**அலகு VIII – அறிவுக்கூர்மை, காரணமறிதல் மற்றும் கணிப்பொறி அறிவு.**

(Mental Ability, Reasoning and Computer Awareness)

i. புள்ளியியல் – (Statistics)
ii. அறிவுக்கூர்மை – சதவீதம், மீ.சி.ம. மீ.பெ.வ. விகிதம் மற்றும் வீதம், தனிவட்டி, கூட்டுவட்டி, நேரம் மற்றும் வேலை, அளவியல்
iii. தர்க்கமுறையில் காரணமறிதல் (Logical reasoning) –

www.tnpsctricks.com



கனசதுரம், பகடை சம்பந்தமான கேள்விகள், திசை அறிதல் (Coding and decoding) எண்வரிசைகள், எழுத்து மற்றும் எண் சம்பந்தமான கேள்விகள், இரத்த உறவு தொடர்பான கேள்விகள், கொடுக்கப்பட்ட படத்தில் விடுபட்ட எண்ணைக் கண்டறிதல் (Visual Reasoning)

### கிராம நிர்வாகம் - பாடத்திட்டம்

கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் கிராம நிர்வாகம் தொடர்பாக 25 வினாக்கள் கேட்கப்படுகின்றன. அவற்றிற்கான பாடத்திட்டம் பின்வருமாறு:

1. கிராமம் மற்றும் வருவாய் நிர்வாகத்தில் கிராம நிர்வாக அலுவலர் பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள்
   (அ) காவல்துறை சம்பந்தமான கிராம நிர்வாக அதிகாரியின் பணிகள்
   (ஆ) பிறப்பு, இறப்பு சான்று சம்பந்தமான பணிகள்
   (இ) அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது பற்றிய விவரங்கள்
   (ஈ) பட்டா, சாதிச்சான்று, ஆதரவற்ற விதவை சம்பந்தமான விவரங்கள்
2. கிராம நிர்வாக அலுவலர் கையாளும் 'அ' பதிவேடு, பட்டா மற்றும் சிட்டா அடங்கல் பற்றிய விவரங்கள்.
3. ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் கிராம நிர்வாக அலுவலர் பராமரிக்கும் கணக்குகள் பற்றிய விவரங்கள்.
4. நில வகைப்பாடு பற்றிய அடிப்படை விவரங்கள்.
5. நிலங்களுக்கான ஆண்டுத் தீர்வை நிர்ணயம் பற்றிய விவரங்கள்.
6. நீர்ப்பாசன வகைகள் பற்றிய அடிப்படை விவரங்கள்.
7. ஜமாபந்தி பற்றி முழுமையான விவரங்கள்.
8. இயற்கை இடர்பாடுகளின் போது கிராம நிர்வாக அலுவலரின் பொறுப்புகள் மற்றும் பணிகள்.
9. கிராமம் மற்றும் நகரத்தில் நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை சம்பந்தமான அடிப்படை விவரங்கள்.
10. கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகளுக்கு நில ஒப்படைப்பு சம்பந்தமான அடிப்படை விவரங்கள்.
11. நில வாடகை வசூலிப்பு சம்பந்தமான விவரங்கள்.
12. நில வருவாயிலிருந்து கழிவு இனம்.
13. அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905–ன் படி A. மெமோரண்டம், B. மெமோரண்டம் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.
14. R.S.O. 27–ன் படி நிலங்களில் ஏற்படும் நில உரிமை மாற்றம் கூட்டுப் பட்டா வழங்குதல்.
15. நில உடைமையாளர்களின் உரிமைகளும், வேண்டுதலும்.
16. வயது, திருமண நிலை, வருமானம், இருப்பிடம் ஆகிய சான்றுகள் வழங்க மேற்கொள்ள வேண்டிய விசாரணை குறித்த செயல்முறைகள்.
17. பட்டா, சிட்டா முதலான பதிவேடுகளைப் பதிவு செய்தல் மற்றும் பராமரித்தல் குறித்த செயல்முறைகள்.
18. அளவை எண், அளவை உட் பிரிவு எண், அளவை புலம் மற்றும் புல அளவுப் புத்தகம் ஆகியவை குறித்த அடிப்படை விவரங்கள்.
19. இயற்கை வளங்கள் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி தொடர்பான கிராம நிர்வாக அலுவலரின் கடமைகள்.
20. கிராம நிர்வாக அலுவலரால் வசூல் செய்யப்படும் பலதரப்பட்ட அரசு வருவாய்.
21. கிராமத்தில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் சம்பந்தமான கிராம நிர்வாக அலுவலரின் கடமைகள்.
22. வருவாய் வசூல் சட்டத்தின் அடிப்படை விவரங்கள்.
23. வனத்துறை நிலம் சம்பந்தமான அடிப்படை விவரங்கள்.
24. சந்தனமரம் மற்றும் விலை மதிப்புடைய மரங்களை விற்பனை செய்வது சம்பந்தமான விவரம்.
25. ஆதிவாசி / பழங்குடியினருக்கு அரசு வழங்கும் பாதுகாப்பு மற்றும் உதவிகள் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலரின் கடமை.

**கிராம நிர்வாக அலுவலர் தேர்விற்குரிய பாட பகுதிகள், தேர்வில் கேட்கப்படும் கேள்விகளின் மாதிரி வடிவம், தேர்வில் வெற்றி பெற வழிகள் போன்ற தகவல்களை நாளை பார்ப்போம்.**

www.tnpsctricks.com



TNPSC - VAO

# டி.என்.பி.எஸ்.சி. - வி.ஏ.ஓ. தேர்வு

## மாதிரி வினா-விடை

தொகுப்பு : சாம் ராஜேஷ்வரன்

## கேள்வித்தாள் விவரம்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ) எழுத்து தேர்வுக்கான பாடத்திட்ட அட்டவணை, ஒவ்வொரு பாடப்பகுதியில் இருந்தும் கேட்கப்படும் கேள்விகளின் எண்ணிக்கை குறித்த விவரங்களை நேற்று பார்த்தோம். தேர்விற்குரிய பாட பகுதிகள், தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளின் மாதிரி வடிவம், தேர்வில் வெற்றி பெறுவதற்கான வழிகள் பற்றி பார்ப்போம்.

**பொதுத்தமிழில் கேட்கப்படும் 80 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு:**

- பகுதி – அ (இலக்கணம்) – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்
- பகுதி – ஆ (இலக்கியம்) – இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- பகுதி – இ (தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்) – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

**பொது ஆங்கிலத்தில் கேட்கப்படும் 80 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு:**

- Part – A (Grammar) – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்
- Part – B (Literature) – இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- Part – C (Authors and Their Literary Works) - இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

(குறிப்பு: விரிவான பாடத்திட்டத்திற்கு www.tnpsc.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பார்த்துக் கொள்ளவும்.)

**மேற்கண்ட பாடத்திட்டத்திற்கு தேவையான புத்தகப்பட்டியல் விவரம் பின்வருமாறு:**

I. பொது அறிவு

1. 6 முதல் 10–ம் வகுப்பு வரை உள்ள (சமச்சீர் பாடப்புத்தகங்கள்) அறிவியல் (Science), சமூக அறிவியல் (Social Science), கணிதம் போன்ற புத்தகங்கள்.
2. பொது அறிவு களஞ்சியம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்
3. India Year Book Published by Ministry of Information & Broadcasting, Government of India. (சமீபத்திய பதிப்பு, 2015)
4. பயிற்சி மையங்கள் வழங்கும் கையேடுகள், பாடத் தொகுப்புகள்
5. பொது அறிவு தகவல்களை உள்ளடக்கிய புத்தகங்கள்
6. தினசரி செய்தித்தாள்கள் படிக்கவும்.

II. திறனறித் தேர்வு (Aptitude & Mental Ability)

1. Aptitude சம்பந்தப்பட்ட புத்தகங்கள்
2. பயிற்சி மையங்களின் கையேடுகள்
3. 8, 9, 10th Standard Mathematics (Samacheer) - புள்ளியியல் பாடம் மட்டும்

III. பொதுத் தமிழ்

1. தமிழ் இலக்கணம் (6 முதல் 10–ம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)
2. தமிழ் பாடம் - (6 முதல் 10–ம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)
3. தமிழ் இலக்கிய வரலாறுகள், அறிஞர்களை பற்றிய தகவல்களை உள்ளடக்கிய புத்தகங்கள்
5. பொதுத்தமிழ் களஞ்சியம்

**இவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது**

A. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கு சரியான விளக்கம்

B. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கு சரியான விளக்கமல்ல

C. A சரி ஆனால் R தவறு

D. A தவறு ஆனால் R சரி

www.tnpsctricks.com

**விடை: C. A சரி ஆனால் R தவறு**

### தேர்வில் வெற்றி பெற வழிகள்

**1. லட்சிய வேட்கை** (Ambition)

தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று பதவிகளை அடைதல் வேண்டும் என்ற லட்சியம் மனதில் என்றும் இருக்க வேண்டும்.

**2. கால அளவு** (Time Limit)

தேர்விற்குரிய பாடத்திட்டம் (Syllabus) மற்றும் புத்தகப் பட்டியல்களை ஆராய்ந்து பார்த்து எவ்வளவு நாட்களில் நம்மால் படித்து முடிக்க முடியும் என்று திட்டமிட வேண்டும். அனைத்துப் பாடத்தையும் படித்து முடிக்க கால அட்டவணை (Time Table) தயாரிக்க வேண்டும்.

ஏதேனும் பணியில் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு 4 முதல் 5 மணி நேரம் ஒதுக்கி தேர்வுக்கு தங்களை தயார் செய்ய வேண்டும். முழுநேரமும் தேர்விற்காக படிப்பவர்கள் என்றால் 10 முதல் 12 மணி நேரம் தயார் செய்ய வேண்டும். இதற்கு ஒரு கால அட்டவணை (Time Table) தயாரிக்க வேண்டும்.

**3. வழிகாட்டுதல்கள்** (Guidelines)

கடைசியாக நடைபெற்ற தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களிடம் ஆலோசனைகள் பெற வேண்டும். அவர்களுடைய அனுபவம், படிக்கும் முறைகள் போன்றவைகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

அதுபோல சென்ற வருடங்களில் தேர்வை எழுதி தோல்வியடைந்தவர்களையும் சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும் பெற வேண்டும். அவர்களுடைய அனுபவம், தோல்விக்கான காரணங்கள் போன்றவைகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

**4. பயிற்சி மையங்களின் பங்கு**

இதில் சில முக்கிய கல்வி நிறுவனங்கள் பத்தாண்டுகளுக்கும் மேற்பட்டு பயிற்சி அளித்து வருகிறது. இதுபோன்ற பயிற்சி நிறுவனங்களின் கையேடுகள் பெரிதும் உதவும்.

**5. எவ்வாறு படிப்பது?** (How to study)

i. இத்தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் கொள்குறி வகையாக இருப்பதால் (Objective Type Questions) இக்கேள்விகளை மட்டும் முதலில் படிக்கக்

www.tnpsctricks.com



**3.** தமிழ் இலக்கிய வரலாறுகள், அறிஞர்களை பற்றிய தகவல்களை உள்ளடக்கிய புத்தகங்கள்

**5.** பொதுத்தமிழ் களஞ்சியம்

**6.** பொதுத் தமிழ் இலக்கியம், இலக்கணம் குறித்த புத்தகங்கள்.



**தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளின் விதம்**

கடந்த ஆண்டு (2014) நடைபெற்ற கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் வினாக்கள் பின்வரும் மாதிரி வடிவங்களில் கேட்கப்பட்டிருந்தன.

**மாதிரி – I – நேரடி கேள்விகள், உதாரணமாக**

**தமிழகத்தில் மயில்களுக்கான சரணாலயம் அமைந்துள்ள இடம்**

A. மதுரை B. புதுக்கோட்டை
C. விராலிமலை D. தஞ்சாவூர்

**விடை: விராலிமலை**

**மாதிரி – II – பின்வரும் கூற்றுகளில் சரியானவை அல்லது தவறானவை எது? – உதாரணமாக**

**கீழ்க்கண்டவற்றுள் எது சரியல்ல என தீர்மானிக்க:– பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் எது தவறு?**

A. வரி விதிப்பை அதிகப்படுத்துதல்
B. அரசின் செலவினத்தை அதிகரித்தல்
C. இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதித்தல்
D. பொதுப் பங்கீடு

**விடை: அரசின் செலவினத்தை அதிகரித்தல்**

**மாதிரி – III – பொருத்துக: உதாரணமாக**

**பட்டியல் I-ஐ பட்டியல் II உடன் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடு**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| **A. இந்திய தேசிய காங்கிரஸ்** | **1. மிதவாதி** |
| **B. தாதாபாய் நௌரோஜி** | **2. இந்தியாவின் பர்க்** |
| **C. மதன் மோகன் மாளவியா** | **3. ஆலன் ஆக்டேவியன் ஹீம்** |
| **D. சுரேந்திரநாத் பானர்ஜி** | **4. முதுபெரும் மனிதர்** |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 3 | 2 | 4 | 1 |
| b | 1 | 2 | 3 | 4 |
| c | 3 | 4 | 1 | 2 |
| d | 1 | 3 | 4 | 2 |

**விடை:** C 3 4 1 2

**மாதிரி – IV – எவை சரியானவை / எவை சரி அல்லாதவை உதாரணமாக**

**பின்வருவனவற்றுள் சரியாகப் பொருந்தப்பட்ட ஜோடி எது?**

| பேரரசு | | ஆட்சியாளர்கள் |
|---|---|---|
| A. சேரரர் | – | கரிகாலன் |
| B. சோழர் | – | சிமுகா |
| C. பாண்டியர் | – | நெடுஞ்செழியன் |
| D. சாதவாகனர் | – | செங்குட்டுவன் |

**விடை: C. பாண்டியர் – நெடுஞ்செழியன்**

**மாதிரி V – கூற்றும், காரணமும்: உதாரணமாக**

**கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:**

**கூற்று (A): இந்திய வரலாற்றில் 1857 ஆம் ஆண்டு கலகம், ஒரு சகாப்தம் முடிந்து மற்றொன்று தொடங்கியதைக் குறிப்பிடுகிறது.**

**காரணம் (R) : பிரிட்டிஷாரின் அடித்தளம் வலிமை பெற்றது**

கூடாது.

ii. முதலில் பள்ளி பாடப்புத்தகங்களில் உள்ள விரிவான வகைப்பாடம் படித்து முடித்ததும், பின்னால் கொடுக்கப்பட்டுள்ள 1. கோடிட்ட இடங்களை நிரப்புக, 2. சரியான விடையைத் தேர்ந்தெடு 3. குறுகிய விடையளி போன்றவைகளுக்கு நாம் விடையை புத்தகத்திலேயே குறிக்க வேண்டும்.

iii. பள்ளிகளில் உள்ள பாடப் புத்தகங்களைப் படித்த பின்னர்தான் பிற புத்தகங்களை படிக்க வேண்டும்.

iv. மேலே தெரிவித்தபடி, பள்ளிப்பாடப் புத்தகங்களைப் படித்து முடித்த பிறகு தேவைப்பட்டால் விருப்பப்பட்ட Market Guide மற்றும் பிற வகைகளில் நமக்கு கிடைக்கும் கொள்குறி வினா வங்கிகளை வாங்கி அதிலுள்ள வினாக்களுக்கு விடையளித்து பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

**6. எவ்வாறு குறிப்புகள் தயார் செய்வது?** (How to prepare notes?)

ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்கும் போது முக்கியமான குறிப்புகளை தனியாக நீளமான நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும்.

(உ.ம்) வரலாறு, புவியியல், அறிவியல் என்று தனித்தனியாக நோட்டுப்புத்தகத்தில் குறிப்புகள் எடுக்க வேண்டும். அவ்வாறு குறிப்புகள் எடுக்கும் போது Margin அதிகமாக விட வேண்டும். ஏனென்றால், இது தொடர்பாக கூடுதல் விஷயங்கள் வேறு ஒரு புத்தகத்திலிருந்து கிடைக்கும் போது அதை இதில் பின்னர் சேர்த்துவிட (Addition) ஏதுவாக இருக்கும்.

**7. கலந்துரையாடல்** (Discussion)

வாரத்தில் இரு முறை 3 முதல் 5 நண்பர்கள் ஒன்று சேர்ந்து குழுவாக அமர்ந்து பொது அறிவுப் பாடங்களை கலந்துரையாடல் செய்ய வேண்டும்.

இவ்வாறு கலந்துரையாடல் செய்வது நமக்குள் இருக்கும் சந்தேகங்களை தெளிவாக்கும் மற்றும் நேர்முகத் தேர்வை எதிர்கொள்கின்ற அச்சத்தையும் நீக்கும்.

**8. மாதிரித் தேர்வு எழுதுதல்** (Writing of Model Examinations)

நண்பர்கள் குழுவாக சேர்ந்து TNPSC பழைய வினாத்தாள்களில் கொடுக்கப்பட்ட வினாத்தாள்களை சேகரித்து மாதிரித் தேர்வு எழுதி தங்களுக்குள்ளேயே தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய வேண்டும்.

மேற்கண்ட பாடத் தொகுப்பினை சரியான வழிமுறையோடு படித்து, தேர்வில் வெற்றி பெற உதவும் வழிமுறைகளை பின்பற்றினால் போட்டித் தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர் கொண்டு எளிதாக வெற்றி பெற இயலும்.

தன்னம்பிக்கையும், சரியான முயற்சியும், முறையான பயிற்சியும் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நாளை முதல் இத்தேர்விற்கான பாடத்தொகுப்பின் அடிப்படையில், **ஒவ்வொரு பாடத்திலிருந்தும் மாதிரி வினாக்கள் தினத்தந்தியில் தினமும் வெளிவருகிறது.** அதனை தொடர்ந்து வாங்கி படித்து பயிற்சி மேற்கொண்டு போட்டித் தேர்வில் வெற்றி பெற்று உங்கள் அரசு வேலை கனவு நனவாக வாழ்த்துக்கள்.

**இயற்பியல் கேள்வி–பதில்கள் நாளை இடம் பெறுகிறது.**

www.tnpsctricks.com